இன்று
என்றும்
நன்று

இன்று மின்னிதழ்

www.indhru.in

2026
ஆகஸ்ட்
16 – 31

இன்று மின்னிதழ் இலவச மாதமிருமுறை





அனைவருக்கும் இனிய சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்.
போராடி பெற்ற சுதந்திரத்தை அனைவரும் பேணிகாப்போம்.
சுதந்திரத்திற்காக போராடிய வீரர்களுக்கு
வீர வணக்கங்கள் செலுத்தவோம்.

ஆசிரியடமிருந்து...

அனைவருக்கும் வணக்கம்.
திரு.அருண் பிரகாஷ்
தயாரித்த சிறப்பிதழ்
அருமையாக இருந்தது என்று
வாசகர்கள் தெரிவித்தது மிக்க
மகிழ்ச்சி...

புதிய எழுத்தாளர்களுக்கு
எப்பொழுதும் நமது இன்று
மின்னிதழில் தொடர்ந்து
வாய்ப்புகள் வழங்கப்படுகிறது.

நாள்தோறும் எழுதுங்கள்.
படியுங்கள்... உங்கள்
அகக்கண் திறக்க புத்தகம்
படிப்பது அவசியம்...

எழுத்தாளர்கள் தங்கள்
வாழ்நாளில் ஒரு
புத்தகத்தையாவது எழுதி
வெளியிட வேண்டும்
என்று வைராக்கிய உறுதி
மொழி எடுங்கள்.

அது காலத்திற்கும் நின்று
பேசும். நன்றி...
வாழ்த்துக்கள்....

ஆசிரியர் வெ.கோபிநாத்,
Whatsapp : 7094053241
e.mail– indhrumail@gmail.com
Web Site : www.indhru.in



அவசர தொலைப்பேசி எண்கள்

Helpline Number	Department
100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
104	State level Helpline for Health
108	Disaster Management / Medical Helpline
112	All in One Emergency Number (General Emergency Department of Telecommunications (DoT))
131	Indian Railway General Enquiry
139	Railway Enquiry
181	Domestic abuse and sexual violence-Women's Helpline
197	Directory Enquiry Service
198	Telephone Complaint Booking
1031	Anti Corruption Helpline
1033	Emergency Relief Centre on National Highways
1066	Anti-poison
1071	Air Accident
1072	Train Accident
1073	Road Accident / Traffic Helpline
1090	Anti terror Helpline / Alert All India
1091	Women Helpline in Distress
1092	Earth-quake Helpline Service
1096	Natural Disaster Control Room
1097	AIDS Helpline
1098	Child Abuse Hotline
1099	Central Accident and Trauma Services
1551	Kisan Call Center
1906	LPG Emergency Helpline Number
1910	Blood Bank Information
1919	Eye Donation / Eye Bank Information Service
1947	Aadhar Card - UIDAI (Unique Identification Authority of India), 1800-180-1947
1950	Election Commission of India
1800-11-4000	National Consumer Helpline

இன்று மின்னிதழின் சில அறிவிப்புகள் வாட்சப் சேனலில் மட்டுமே வெளியாகும். இந்த சேனலை நீங்கள் தொடர்ந்து பார்த்து வந்தால் போட்டிகள் பற்றிய விபரங்கள் வெளியாகும். நீங்கள் அது தொடர்பான படைப்புகளை உடன் அனுப்ப ஏதுவாக இருக்கும். நீங்களும் நமது இன்று வாட்சப் சேனலில் இணைய விரும்பினால் அருகில் உள்ள படத்தை தொட்டு இணையவும். நன்றி. இணைந்து பல சாதனைகள் செய்வோம். வாழ்த்துக்கள்.

இன்று மின்னிதழ்
www.indhru.in

குண(வி)சித்திரங்கள்

அரும்பூர். க. குமாரகுரு, மயிலாடுதுறை

"அடியே.. சின்ன வாண்டு.. ஒங்கொப்பன் குடுச்சிட்டு வந்து.. தெனம் வம்புக்கு இழுத்து.. உங்கம்மாவ போட்டு அடிக்கிறானாம்.. சோத்துப்பானைய போட்டு ஒடக்கிறானாம்.. உம்மேல உசுறயே வச்சிருக்கிறானாமே.. அவன நீ.. எடுத்து சொல்லி திருத்தக்கூடாதா.? ".. வக்கணையாய் கேட்கிறாள் அத்தைக்காரி.

மூன்றாம் வகுப்பு போகும் மூக்கொழுகி சித்ரா யோசித்தாள். "அத்தே.. அம்மாகிட்ட அப்பன் சண்டைகட்டும் போது நான்.. வேட்டிய புடுச்சி இழுப்பேன்.. ஒருதடவை காலுல கூட கடிச்சுட்டேன்.. ஓ. ன்னு ஓலம் போட்டு அக்கம்பக்கத்து ஆளுகளை திரட்டுவேன்.. நான் ரவியோண்ட பிள்ள.. வேறென்ன செய்யனும்.. சொல்லு.? "கைகளையும்... இடுப்பையும் ஆட்டி அபிநயத்தோடு கூறுவதை கேட்டு.. ஊமை கோட்டானாக அமர்ந்திருந்த சித்ராவின் அம்மாவும் சிரித்தாள்.



"அடியே.. இந்த தடவை நீ சொன்ன கட்சிக்குதான் உங்கப்பன் ஓட்டு போட்டானாமே.. உண்மையாவா.?"

"ஆமா.. என் தலையில அப்பாவோட கையப்பிடிச்சி வச்சிகிட்டு.. 'என் மேல நீவச்ச பாசம் உண்மையின்னா.. 'அந்த'சின்னத்துல ஓட்டு போடுப்பா'ன்னு சொன்னேன்.. 'சத்தியமா போடுறேன்மா'ன்னு சொல்லி போட்டுச்சே... 'நம்ம புள்ள ஆசைப்படுது நீயும் போடுடீ'ன்னு அம்மாகிட்டயும்.. சொல்லுச்சே.. என் ஆசை அப்பா.. ஆகாங்" என்றது சுட்டி.

"அடியே.. அதே மாதிரி.. ஒங்கப்பன் கைய தலைமேல வச்சி.. என்மேல வச்ச பாசம் உண்மைன்னா.. இனி நீ சாராய பாட்டிலை கையில தொடவேக் கூடாதுன்னு கேளுடி'என்றாள் அத்தை. சரியென்று தலையாட்டிய குழந்தை அப்பனைத்தேடி கோயில் ஆலமரத்தடிக்கு ஓடியது.


வீட்டில் நிம்மதியாக நல்ல செய்திக்கு காத்திருந்தவர்களுக்கு.. முகம் சுருங்க வந்த குழந்தை குழப்பத்தை விதைத்தது.

"என்னம்மா.. ஆச்சு.. போனீயே.. ஒப்பனுகிட்ட.. சத்தியம் வாங்கினியாடீ.?!"

. "அய்யே.. போ.. அத்தே.. அவரு என் கைய பிடிச்சு.. அவரு தலையில வச்சுகிட்டு.. 'இந்த அப்பன் மேல பாசம் உள்ள பொண்ணுன்னா.. காதுல கிடக்குற கம்மலை கழட்டி குடு.. அப்பன் வேலைக்கு போய் மீட்டு தந்துருவேன் 'சொல்லி.. கழட்டி வாங்கிகிட்டு.. சாராயக் கடைய பார்த்து கம்பிய நீட்டிட்டாரு" என்றது குழந்தை.*.

கவிதை

காதல் வாசி



முத்து ஆனந்த்
வேலூர்

தினசரி இதழ்கள்
காலை நாளிதழ்
மாலை நாளிதழ்
வாரமிருமுறை இதழ்
வார இதழ்
மாதமிருமுறை இதழ்
மாத இதழ்
காலாண்டிதழ்
அரையாண்டிதழ்
மின் இதழ்கள்
எனப்
பரவலான இதழ்கள்
உலகம் முழுவதும் பரவிக் கிடக்க
நானோ
அடிக்கடி
உன்
கண்களை மட்டுமே
மிக விரும்பிப் படிக்கும்
*காதல் வாசி!
வாசிப்பும்
நேசிப்பும்
வாழ்க்கையை
எத்தனை வசமாக்கும்
என்று புரிந்தரிந்த
புன்னகை இளவரசி
நீ!
வரிக்கு வரி சிரி என்ற
நகைச்சுவைகளைப் போல்
நொடிக்கு நொடி வாசி என்று
என்னை
எந்த நேரமும்
வரவேற்கும் குல்கந்துக் கோதை
நீ!
நீ
வந்த வாசி
என்
வாழ்வின் வரம்
என்னைக்
*காதல் வாசியாக்கியது!
இனி வாழ்நாள் முழுவதும்
நாம் காதல் கிரகவாசிகள் தானே
என்
இனிய பேரன்பே!

கவிதை

இப்போதும் நாம் வாடிக்கையாக
சில்வர் ஜூஸ் அருந்தும் காபி
ஷாப்பில் , உனக்கு ஒன்று,
எனக்கு ஒன்று என்று இரண்டு
சில்வர் ஜூஸ்களை ஆர்டர்
செய்துதான்
அமர்ந்திருக்கிறேன்!

நீ என்னை விட்டு பிரிந்து போன
பின்பும்!



எம்.பி.தினேஷ்.
கோவை-25

பரிசு
ரூ.
50

"ஒரு கிராமத்தானின் நகர விஜயம்"



முகில் தினகரன்
கோயமுத்தூர்



மண்ணின் மணம் தாங்கி வந்தேன்
மனித மனம் காணலாம் என்றே...

நகரம் வந்து நின்றபோது
நாடகம்தான் நடக்குதிங்கே!

புன்னகை கூட பணத்துக்கு
வாங்கும் பொருளாய் இங்கே!

பொய்யான முகமூடிகள்தான்
பொதுவான ஆடையாய்!

"வணக்கம்" சொல்லும் குரலில் கூட
வாய்ப்புக்கான வணிகத் தொணி!

கண்ணீர் கூட கணக்குப்
பார்த்துத்தான் விழுகிறது...

உறவுகள் என்ற சொல்
யூஸ் அண்ட் த்ரோ ஆகி விட்டது!

சிரிப்பின் பின்னே சர்ப்பங்களின்
சத்தம் சந்தர்ப்பவாதமாய்!

நேரம் துரத்திக் கொண்டிருக்க
நிம்மதி மட்டும் தொலைவில்!

அம்மா சமைத்த சோற்றுச் சுவை
அடிநாக்கில் அரிச்சுவடியாய்!

அப்பா சொல்லும் அறிவுரை ராகங்கள்
அபஸ்வரத்தின் அடி நாதங்களாய்!

பாட்டி சொன்ன பழமொழிகள்
புளித்துப் போன பீஸாக்களாய்!

பண்பாடு பேசினால் காலாவதியன்
கலாச்சாரம் சொன்னால் கருங்காலி!

காதலில் கூட விழாக்காலத் தள்ளுபடி?
கல்யாணத்தில் கரண்ஸி வாசனை!

கைப்பேசி போதும் காலைச்
சூரியன் தேவையில்லை?

ஆன்லைனில் நண்பருண்டு
ஆஃப்லைனில் அநாதையாய்!

நாகரிகமெனும் பெயரில்
நாணங்கள் கழற்றப்படும்!


அழகென்றால் உடம்புதான்
அறிவென்றால் பணந்தான்!

மீண்டும் வேண்டும்
எந்தன் கிராமம்!

மண்ணில் மண்ணாய்க்
கலந்து வாழ்ந்திட!

அங்கே ஏழ்மையிருந்தாலும்
மனசு மட்டும் பணக்காரனாய்....

சிரிப்பு



டீ. என். பாலகிருஷ்ணன்
மடிப்பாக்கம்

"உங்க பையன் அடிக்கடி கோவில் தேர் கிட்ட போய் நிக்கறானே, ஏன்?"

"நான்தான் சொன்னேனே. 'அவன் அப்பப்போ தேரை இழுத்து தெருவுல விட்டுருவான்'னு..."

"அந்தாளு ரொம்ப வெகுளியா இருக்காரு"

"எப்படி சொல்றே?"

"நேத்து பெங்களூர்லேருந்து 'வந்தே பாரத்'ல வந்தேன்'னு நான் சொன்னதுக்கு, 'அப்போ பெங்களூர் போனப்போ ' 'போனே பாரத்'ல போனியா'னு கேக்கறாரு!"

பஸ்ஸில் கண்டக்டரும்,
ஒரு பெண்மணியும்:

"உனக்கு யாரும்மா டிக்கட் வாங்கறது ?"

"முன்னால ஒரு அம்மா கொண்டை போட்டிருப்பாங்க பாருங்க, அவங்க வாங்கறாங்க "

"ஏம்மா, எல்லாரும் கொண்டைய பின்னாலதானே போடுவாங்க, அவங்க ஏன் முன்னால போட்டிருக்காங்க ?"





கவிதை

நீ மழையில் நனையக் கைவிரி!
நான் கண்ணீரில் நனையக்
கைவிரிக்காதே!

சு. அருண் பிரகாஷ்
தங்கம்மாள்புரம்





கட்டிப்பிடி
எட்டிப்போகும்
காய்ச்சல்!

அவள் சிரித்து தான்
சென்றாள்
ஏனோ
பறி போனது
பூட்டி வைத்த இதயம்!

எதிர்பார்ப்புகள்
எல்லாமும்
நிஜ வாழ்வில்
நடப்பதில்லை
சில கனவுகள்
கனவுகளாகவே போய்
விடுகின்றன
உன்னை போல!

இப்படியே
சிரித்து கொண்டே இரு
அந்த
இளையராஜாவுக்கு
போட்டியாக
புதிய சிம்பொனி
படைத்து விடுவேன்

நீ சிரித்து
தொலைப்பதால்
சிந்தி தொலைத்து
விடுகிறது
ஒரு கோப்பை
கவிதைகள்!

உன் இடுப்பு மடிப்பில்
ஒளிந்திருக்கிறது
நான் கேட்டு இரசித்த
கஸலொன்று!


நீ
தேவதையாக மட்டும்
இருந்திருந்தால்
என் கவிதைகள்
பிறக்காமலே
இருந்திருக்கும்!

நீ தேவதையாய்
அவதரிக்காவிட்டால்
என் கவிதைக்கு
பிறப்பேது?!

–லி.நௌஷாத் கான்

என் கவிதைக்கெல்லாம்
காரணமும் நீ–என்
கர்த்தாவும் நீ!

எனது 6 ஆம் வகுப்பு




திருச்சிற்றம்பலம் சுரேஷ்

அப்பா... புதிய வேலைக்காக ஆரோபுட் பிஸ்கட் கம்பெனியில் பணிபுரிய நாங்கள் "திருச்சிற்றம்பலம் "வந்தோம். இந்த ஊர் புதுச்சேரி.. மயிலம்.. திண்டிணம் அருகில் உள்ளது. அதாவது மையப் பகுதியில் உள்ளது. திருச்சிற்றம்பலத்தில் இரு பள்ளிகள் இன்றும் உள்ளது.

தேச தந்தை "காந்தி அடிகள் புதுவைக்கு வந்த பொழுது, திருச்சிற்றம்பலத்தில் உள்ள இரு பள்ளிக்கும் வருகைபுரிந்தார். அந்த இரு பள்ளிக்கும் "காந்தியடிகள் நடுநிலை பள்ளி. காந்தியடிகள் உயர் நிலை பள்ளி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இப்பள்ளி தனி நபர் மூலமாக இயங்கியது. சம்பளம் மட்டும் அரசு கொடுத்தது. அதாவது அரசு உதவிபெறும் பள்ளி.

நான் இரு பள்ளியிலும் படித்தேன். 06–ம் வகுப்பு படித்த போது எனக்கு வகுப்பு எடுத்த ஆசிரியர் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தோம்.

பள்ளியில் எனக்கு விளையாட்டு வகுப்பு பிடிக்காது. எனக்கு அன்றும், இன்றும் திரைப்படபாடல் முழுமையாக பாட தெரியாது. ஆனால் ஆசிரியர் பாடச்சொல்வார்.



06ம் வகுப்பு படிக்கும் பொழுது கிடைத்த இரு நண்பர்கள்.. இன்றும் தொடர்பில் உள்ளார்கள்.

06வகுப்பு படிக்கும் பொழுது மூன்று மரணம் எனக்கு இன்றும் நினைவில் உள்ளது.

1.என் பாட்டி.
2.இந்திரா காந்தி.
3.வகுப்பு நண்பன்.

2000ம் ஆண்டில் அந்த ஊரில் இருந்து இப்பொழுது வசிக்கும் கடலூர்மாவட்டம், திருக்கண்டேஸ்வரம் வந்துவிட்டோம்.

திருச்சிற்றம்பலத்தில் இருந்துதான் பத்திரிக்கைக்கு படைப்புகள் எழுத ஆரம்பித்தேன். அதன் பிறகு தான் வாழ்க்கை என்றால் என்ன? வறுமை என்றால் என்ன? உறவுகள் என்றால் என்ன புரிய வைத்தது. அந்த ஊரில் படித்த 10–ம் வகுப்போடு என் கல்வியும் முற்றுப்பெற்றது.

எனது 6 ஆம் வகுப்பு

கோபிபச்சமுத்து,
கிருஷ்ணகிரி .



கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1990ஆம் ஆண்டில் நான் ஆறாம் வகுப்பில் சேர்ந்தேன். பின்னர் அங்கேயே 1996ஆம் ஆண்டில் 12ஆம் வகுப்பு முடித்தேன். எங்கள் பள்ளியில் ஆறாம் வகுப்பு A பிரிவு மட்டும் ஆங்கில வழியில் (மீடியம்) செயல்படும். அது தவிர B, C, D, E, F, G, H, I, J என 9 வகுப்புகளும் தமிழ் வழியில் நடத்தப்படும். ஆங்கில வழியில் பயில கடும் போட்டி நிலவும். ஐந்தாம் வகுப்பு முடித்துவிட்டு ஆறாம் வகுப்பில் சேர நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். அதில் தேர்ச்சி அடைந்தால் மட்டுமே அங்கு ஆறாம் வகுப்பில் சேர முடியும். கிருஷ்ணகிரி மற்றும் அதனை சுற்றியுள்ள வெவ்வேறு பதின்ம (மெட்ரிக்) பள்ளிகளில் பயின்ற 120 மாணவர்கள் நாங்கள் ஒரே வகுப்பில் படித்தோம். மறைந்த திரு. பாஸ்கர் லோகநாதன் அவர்கள் எங்களுக்கு வகுப்பாசிரியராக இருந்தார். ஆங்கிலம் மற்றும் கணக்கு பாடங்கள் நடத்துவார். தமது வாழ்வில் நடந்த சுவையான சம்பவங்களை அழகாக நினைவு கூர்ந்து வகுப்பில் ஆர்வத்தை ஏற்படுத்துவார். யாரையும் கடிந்து பேச மாட்டார். ஆனால் கோபம் வந்து விட்டால் அவர் அவராக இருக்க மாட்டார். நல்ல மனிதர். மாலையில் பள்ளி முடிந்ததும் பள்ளிக்கு சற்று தூரத்தில் இருக்கும் பாப்பாரப்பட்டி என்று அழைக்கப்படும் அண்ணா நகரில் அவர் குடியிருந்த வீட்டிற்கு அப்படியே டியூஷனுக்கு செல்வோம். அங்கும் மாணவர்களை வரிசையாக அமர வைத்து கத்தி, கத்தி ஆங்கில கவிதைகளையும் கணித வாய்ப்பாடு களையும் சொல்ல வைப்பார். பின்னர் 8 மணிக்கு அங்கிருந்து கிளம்புவோம். யாரிடமும் 'டியூஷன் பீஸ் கொடுங்கள்' என்று கேட்க மாட்டார். நாங்களாக கொடுத்தால் உண்டு. இது தவிர தமிழ்ப் பாடம் கற்பித்த சிவம்மாள் டீச்சர் அறிவியல் பாடம் கற்பித்த ஜெயராமன் சார், சமூக அறிவியல் பாடம் கற்பித்த திருமலை சார் ஆகியோரும் என் நினைவில் இன்றும் நீங்காமல் நிறைந்திருக்கிறார்கள். உடன் பயின்ற அனைவரும் நல்ல நண்பர்கள். ஒருவரை குறிப்பிட்டு மற்றொருவரை குறிப்பிடாமல் விட்டால் நன்றாக இருக்காது; ஏனென்றால் இன்றைக்கும் நாங்கள் புலனக் குழுவில் தொடர்பில் இருக்கிறோம். பின்னர் பி.ஏ., ஆங்கிலம் எம்.,ஏ., ஆங்கிலம் பி.எட்., மற்றும் எம். ஃபில்., ஆகிய பட்டங்களை முடித்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் போட்டித் தேர்வு எழுதி, அரசுப் பள்ளியில் முதுகலை ஆசிரியராக பணியில் சேர்ந்து, நான் பயின்ற அதே பள்ளியில் எனக்கு பாடம் கற்பித்த சில ஆசிரியர்களுடனும் எனது மூத்த சகோதரருடனும் (என் தந்தையும் இதே பள்ளியில் பட்டதாரி வரலாறு ஆசிரியராக பணியாற்றியவர்; எட்டாம் வகுப்பில் எனக்கு வகுப்பாசிரியர்) 2013 முதல் 2023 வரை பணிபுரிந்து (2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகள் மேல்நிலை உதவித் தலைமை ஆசிரியர் பணி) பின்னர் 2023 நவம்பரில் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்றேன். ஒவ்வொருவரது வாழ்விலும் பள்ளிப் பருவம் என்பது மறக்க முடியாத ஒன்று; அந்த வகையில் இன்றைக்கும் எனது பள்ளிப் பருவ நினைவுகள் பசுமையாக நெஞ்சில் நிழலாடுகின்றன.

எனது 6 ஆம் வகுப்பு

கோவைக்கவி புவனா.



எனது ஆறாம் வகுப்பு என்றதுமே எனது தந்தையின் நினைவே முதலில் வருகிறது. எங்களது ஊர் சர்க்கார் சாமக்குளம் என்ற கோவில் பாளையம். அரசு மேல்நிலைப் பள்ளியில் என்னை சேர்க்கும் போது விண்ணப்பத்தில் அடையாளமாகத் தழும்பு மச்சத்தை குறிப்பிட வேண்டும். எனது மச்சத்தைக் குறிப்பிட்டு எழுதி விட்டார்கள், ஆனால், தழும்பு எங்கே தேடியும் கிடைக்கவில்லை. அப்பொழுது பெண் ஆசிரியர்கள் அறைக்குள் சென்று பார்த்து வருமாறு கூறினார்கள். என்னைச் சோதித்த ஆசிரியை, 'ஏங்க, புள்ளைய இப்படி வளத்தி வச்சிருக்கீங்க! ஒரு சைக்கிள் ஓட்டி கீழ விழுந்த எந்தத் தழும்புமே இல்லையா?' என்று என் தந்தையாரிடம் வினவ, எனக்கு ஒரே ஒரு பொண்ணுங்க. ரொம்பக் கடவுளிடம் வேண்டி ஐந்து பசங்களுக்கு அப்புறம் பிறந்த ஒரு பொண்ணுங்க. அதனால, ரொம்பப் பத்திரமாப் பாத்துக்கிட்டோம் என்று என் அப்பா சொல்ல, ஆசிரியை கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் நிறைந்தது. 'அப்பேர்ப்பட்ட அப்பா எனக்கு' என்று நான் பெருமையுடன் மகிழ்ந்து கொஞ்ச நாட்கள் கூட ஆகவில்லை. நான் ஆறாம் வகுப்புப் படிக்கும்போதே எனது தந்தை தவறிவிட்டார்.

அதனால், ஆறாம் வகுப்பு என்றதுமே எனது தந்தையே எனக்கு முதலில் நினைவுக்கு வருவார். பள்ளியில் சேர்ந்த முதல் நாள் ஆறாம் வகுப்பு 'சி' பிரிவில் என்னைச் சேர்த்திருந்தார்கள். என்னுடன் ஐந்தாம் வகுப்புப் படித்த தோழிகள் யாருமே 'சி' பிரிவில் இல்லை. இடைவேளையில், அவர்களைச் சந்தித்தபோது அவர்கள் அனைவரும் 'ஏ' பிரிவில் இருப்பதாகக் கூறினார்கள். மனதிற்கு கஷ்டமாகத்தான் இருந்தது. இருப்பினும் 'சி' பிரிவில் புதிதாக இணைந்திருந்த தோழிகளோடு என்னையும் அவர்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டேன். புதிதாக இணைந்த மாணவி ஒருத்தி மதிய உணவு எடுத்து வரவில்லை என்று கூற, 'என்னுடன் எங்கள் வீட்டிற்கு வா. மதியம் சாப்பிடலாம்!' என்றே எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்து மதிய உணவு 'எனது அம்மாவின் கையால்' இருவரும் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்குச் சென்றோம். மதியம் வந்த எங்கள் வகுப்பு ஆசிரியர் நான் 'ஏ' பிரிவு என்றும் அந்த வகுப்புக்கு செல்லுமாறு கூறினார். மனம் நிறைய மகிழ்ச்சி இருப்பினும், அந்த 'சி' வகுப்பில் உள்ள அனைவரும் எனக்கு சிறிது நேரத்திலேயே உற்ற தோழிகள் ஆயினர். அவர்களை எல்லாம் பிரிய எனக்கும் சிறிது வருத்தம் தான் இருந்தது. எனது வகுப்பு ஆசிரியர் தண்டாயுதம் அவர்கள் மிகவும் அன்பானவர். எனது மூத்த அண்ணன் ஆறுமுகம் அவர்களது வகுப்பில் அவருக்கு மிகவும் பிடித்த மாணவன். ஆகையால், அவரது தங்கை நான் என்று என்மேலும் அவருக்குப் பிரியம்.

நான் ஆறாம் வகுப்பில் பயந்த ஆசிரியை என்றால் எங்கள் அறிவியல் ஆசிரியை எஸ்தர் தான். இவர் எப்பொழுதும் கோபமாகவே இருப்பார். நான் கொஞ்சம் நன்றாகப் படிக்கும் காரணத்தினால், என்னிடம் அவர் கோபத்தைக் காட்டியதில்லை. படிக்காதவர்களை அடி பின்னி எடுத்து விடுவார். தமிழ் ஆசிரியர் பொன்னுசாமி. இவர் செய்யுளை நடத்தும் போதே எங்களுக்கு மனப்பாடம் ஆகிவிடும். இருப்பினும், தென்றல் என்ற தமிழ் கைடு வாங்கி விட்டீர்களா? என்று அனைவரையும் வாங்க வைத்து விடுவார். கணித ஆசிரியர் ரத்தினசாமி அவர்கள். கணிதத்திற்கும், எனக்கும் கொஞ்சம் ஏழாம் பொருத்தம் தான். இதுவரை 35 மதிப்பெண்ணை நான் தாண்டியதே இல்லை. ரத்தினசாமி ஆசிரியரிடம் சிறிது காலம் கணிதத்திற்காக டியூசனுக்கும் சென்றுள்ளேன்.

வரலாறு ஆசிரியர் ஓகே மாஸ்டர். ஓகே என்றால், எங்கள் ஊரில் அருகில் உள்ள ஓரைக்கல்பாளையம். அதைச் சுருக்கி ஓகே மாஸ்டர் என்று சொல்லுவார்கள். அதனால், எனக்கு அவர் பெயர் கூடத் தெரியாது. ஓகே மாஸ்டர் என்று தான் தெரியும். 'எல்லாரும் புக்கைப் பார்த்துப் படிங்க!' என்று கிளாஸ் லீடரை அழைத்துப் பாடத்தை அப்படியே படிக்க வைத்து எங்களைக் கவனிக்கச் சொல்வார்.

எங்கள் வீட்டில் எனக்கு 'அதிக செல்லம்' என்பதால், நான் பள்ளிக்குச் சென்ற முதல்

எனது 6 ஆம் வகுப்பு

கோவைக்கவி புவனா.



நாள் மட்டுமல்ல, எல்லா நாளும் பள்ளிக்குச் செல்ல எனக்கு அழுகையாக தான் வரும். இதில், திருப்பமாக அறிவியல் ஆசிரியர் எஸ்தர் ஓய்வு பெற்ற நிலையில் அவருக்குப் பதிலாக புதிதாக மும்தாஜ் என்ற அறிவியல் ஆசிரியர் எங்களுக்கு வர, அன்பான ஒரு தேவதையாகவே எங்கள் கண்முன்னே தோன்றினார். எல்லா ஆசிரியர்களும் எனக்கு அன்பானவர்களே.
இருப்பினும், 'மும்தாஜ் டீச்சருக்கும் எனக்குமான, பந்தம்' என்னவென்று எனக்குத் சொல்லத் தெரியவில்லை. அவருக்குக் குழந்தைகள் இல்லாததால் என்னை அவர்களின் பெண் குழந்தையாகவே நினைத்து என் மீது அதிக அன்பு வைத்தார்கள்.
நானும் கொழு கொழுவென்று 'டெடி பியர்' மாதிரி இருந்ததாலோ என்னவோ– எனக்கும் சேர்த்து அவரே மதிய உணவு கொண்டு வருவார். சில சமயத்தில் ஊட்டியும் கூட விடுவார்.

படிப்பைத் தவிர எனக்கு கோலமும் போட கூட கற்றுத் தந்திருக்கிறார் மும்தாஜ் டீச்சர். இது எனது உற்ற தோழிகளுக்குக் கூடப் பொறாமையை ஏற்படுத்தியது.
அறிவியல் பாடத்தை அழகாகவும், தெளிவாகவும் நடத்துவார்.
சோதனைக் குடுவையில் என்று அவர் தொடங்கி முடிக்கும் வரை அப்படியே பரீட்சை அறையில் அவர் செயல்முறை விளக்கத்துடன் கூறியது கண் முன்னே தோன்றும். அப்படியே வினாத்தாளில் விடையை எழுதி விடுவோம். நான் அவர் நடத்திய அறிவியல் பாடப் பரிட்சையில் 99 மதிப்பெண்ணே அதிகம் பெற்றுள்ளேன்.


நாங்கள் ஏழாம் வகுப்பு செல்லும்போது அவர் கருவுற்றதாகவும், அதிலிருந்து ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறுவதாகவும் என்னிடம் கூறினார். அப்பொழுதெல்லாம் அலைபேசி இல்லாததால், எங்கள் இல்லத்திற்கு வந்து அம்மாவிடமும் என் அண்ணன்கள்ளிடமும் என்னை நன்றாகப் படிக்க வைக்குமாறும் நல்லபடியாக பார்த்துக்கக் கூறியும் விடைபெற்று சென்றார்கள். பொதுவாகவே நான் அனைவருடனும் அன்பாக பழகுவதால் எனக்கு தோழமைகள் மிகவும் அதிகம் குறிப்பிட்டு சொன்னால் ஜோதி, வித்யா, தேன்மொழி, சுஜாதா, புவனேஸ்வரி, மணி, கலாராணி போன்றவர்கள் எனக்கு நெருங்கிய தோழிகள். இதில் சிலருடன் மட்டுமே இன்றுவரை தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம் குறிப்பாகக் கூடைப்பந்து, கைப்பந்து, கபடியென இது போன்ற விளையாட்டுகளைக் கற்றுத் தந்து சான்றிதழ்களையும் பெற்றுத் தந்திருக்கிறார் விளையாட்டு ஆசிரியை பூவாத்தாள் அவர்கள். இவரின் கணவர் தமிழ்க் கட்டுரை ஆசிரியர் மாரப்பன் அவர்கள். விளையாட்டு ஆசிரியர் ஆறுமுகம். இவர் எங்களது குடும்ப நண்பர். இவர் விளையாட்டுக்களோடு நடனப் பயிற்சியையும் உடற்பயிற்சியையும் கற்றுத் தருவார். கைத்தொழில் ஆசிரியை பெயரை நான் மறந்து விட்டேன் இவர் ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்பு வரை அளித்த பயிற்சிகளால் தையற்கலை, ஓவியக்கலை, பாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டியென அனைத்து போட்டியிலும் நானே முதற் மதிப்பெண் பெற்றுள்ளேன்.
எனது ஆறாம் வகுப்பு ஆசிரியர்களை நினைவுபடுத்தும் போது பன்னிரண்டாம் வகுப்பு ஆசிரியர்கள் வரை எனது மலரும் நினைவுகளென மனதிற்குள் மனப்பாடமாய் வந்து செல்கிறார்கள். பானுமதி டீச்சர், மணி டீச்சர், தனபாக்கியம் டீச்சர், யசோதா டீச்சர், ஜோதி டீச்சர், செந்தில் மாஸ்டர், கிருஷ்ணவேணி டீச்சர், எங்களது தலைமை ஆசிரியர் இரவிச்சந்திரன் அவர்கள் யாவரும் எனக்கு இறைவன் அருளிய மதிப்புமிகு குருமார்கள். எனது ஆசிரியர்கள் என்றென்றும் வணக்கத்திற்குரியவர்கள்!

எனது பள்ளிப் பருவத்தை நினைவு கூறச் செய்து எனது நினைவுப்பேழையில் உள்ளதை இன்று இதழில் அச்சிட்டு உருவகப்படுத்தும் இன்று ஆசிரியருக்கு இரு கரம் கூப்பிய எனது மனமார்ந்த நன்றிகள்!

சேமிப்பே உங்கள் முதல் செலவாக இருக்கட்டும்...
SAVE

எனது 6 ஆம் வகுப்பு

முத்து ஆனந்த் வேலூர்



நான் ஆறாம் வகுப்பு படித்த பள்ளி வேலூர் சைதாப்பேட்டை யிலுள்ளது. அந்தப் பள்ளியின் பெயர் கோடையிடி அ குப்புசாமி முதலியார் மேனிலைப் பள்ளி.

என் ஆறாம் வகுப்பு ஆசிரியையின் பெயர் வசந்தா. நல்ல தங்கமான டீச்சர். அதே நேரம், மிகவும் கண்டிப்பானவர்.

ஆறாம் வகுப்பில் எனக்கு நிறைய தோழர்கள் இருந்ததால் தனித்தனியாக என்னால் பெயர்களைக் குறிப்பிட முடியவில்லை.

ஆறாம் வகுப்புப் படிக்கும் போது நான் தான் கிளாஸ் லீடர். எங்கள் கிளாஸிற்கு நேர் எதிரே உள்ள ஆறாம் கிளாஸ் பெண்கள் வகுப்பு ஜன்னல் வழியாகத் தெரியும். அந்த வகுப்பிற்கு லட்சுமி என்னும் பெண் கிளாஸ் லீடர். நான் பார்த்தால் அந்தப் பெண்ணும், அவள் பார்த்தால் நானும் ஜன்னல் வழியாக மிக நன்றாகத் தெரியும். அடிக்கடி நாங்கள் இருவரும் இயல்பாகப் பார்த்துக் கொள்வதால் என் வகுப்பு நண்பர்களும், அவள் வகுப்புத் தோழிகளும் அடிக்கடி எங்கள் இருவரையும் சேர்த்துக் கிண்டலும் நையாண்டியும் செய்வார்கள். அந்த வருஷம் முடியும் வரை நானும் அந்தப் பெண்ணும் படாத பாடு பட்டு விட்டோம். இதை நான் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன்.

அடுத்ததாக – அறிவியல் ஆசிரியர் சி கே சுப்பிரமணியம் என்பவர். இவர் நன்றாகப் பாடம் நடத்துவதுடன் அல்லாமல் எங்களுடன் பயங்கரமாக அரட்டை அடிப்பார்.

அவர் என் வகுப்பில் படிக்கும் பையன்களுக்கு உருவத்திற்கும், செயல்களுக்கும் ஏற்றவாறு 'நிக் நேம்' சூட்டுவார். அந்தப் பெயர்கள் இப்பொழுது வரை எனக்கு மறக்கவில்லை.

அவர் என் நண்பர்களுக்குச் சூட்டிய நையாண்டிப் பெயர்கள்

அண்டா சொரண்டி
குண்டா உருட்டி
நாயோட்டி
நீண்ட காது
அடுப்பூதி
இப்படி...

இன்னும் சில பெயர்கள் நினைவிற்கு வரவில்லை.

ஆக – ஆறாம் வகுப்பு 'மலரும் நினைவுகளை' நினைவூட்டி மகிழ்வித்த நம் 'இன்று' இதழுக்கு என்றும் நன்றி!



ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம்



1. என்ன சாதாரணமா நினைக்காதடா...

அப்படின்னா நூறு ரூபாய் குடுத்துட்டு நினைக்கவாடா

2. கோயில் மணி சத்தம் கேட்டதும் ஏன்டா பரபரப்பு அடையாற ?

சீக்கிரம் போகலைன்னா பிரசாதம் கிடைக்காதுடா

3. என்னோட ஆருயிர் நீ டியர்

இருக்கறது ஒரு உயிர் நீ ஆறு உயிர்ன்னு பொய் சொல்றியேடா

4.அவர் போலி சாமியான்னு எப்படி சொல்றடா?

சுக்கிரன் வீட்டில் பத்துநாள் தங்கிட்டு வர்றேன்னு சொல்றாரே

5. மன்னர் ஏன் போர்க்களத்துக்கு வெளியே பதுங்கு குழி அமைக்கச் சொல்கிறார்?

போர் இரைச்சலால் நிம்மதியாக தூங்க முடியவில்லையாம்.

எனது 6 ஆம் வகுப்பு



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

நான் 1962. ஆம் ஆண்டு நெல்லை மாவட்டம் களக்காடு இ.சி.எம். எலிமெண்டரி ஸ்கூலில் ஆறாம் வகுப்பு படித்து கொண்டு இருந்தேன். தற்போது இந்த பள்ளி கோமதி அருள்நெறி மேல் நிலை பள்ளியாக உள்ளது. அப்போது எனக்கு வகுப்பு ஆசிரியர். திரு. ஆவுடையப்ப பிள்ளை என்பவர் பாடம் நடத்தி கொண்டு இருந்தார். எனது கை எழுத்து அப்போது நன்றாக இருக்காது வகுப்பு ஆசிரியர் எனது கையில் ஸ்கேல் கொண்டு அடித்து கை எழுத்தை நன்றாக எழுதும் படி சொன்னார் . ரூல்டு நோட்டில் தினசரி எழுதி காட்ட வேண்டும் என கண்டிப்புடன் கூறினார். நானும் அதன் படி எழுதி கை எழுத்து சரியானது. மேலும் அவர் நகைச்சுவையாக புரியும் படி கதைகள் சொல்லி பாடம் நடத்துவார். அவர் சொல்லி கொடுத்த நகைச்சுவை கதைகள் என் மனதில் ஆழமாக பதிந்து விட்டது. என்னுடைய 14 வயதில் பத்திரிக்கைக்கு எழுத ஆரம்பித்தேன். முதன் முதலில் நான் எழுதிய. ஜோக் அன்றைய மாலைமுரசு பேப்பரில் சிரிப்பு பகுதியில் வெளி வந்தது. அதில் எனக்கு ஒரு ரூபாய் பரிசு கிடைத்தது. என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை அன்றில் இருந்து இன்று வரை அனைத்து பத்திரிகைகளுக்கும் துணுக்கு ஜோக்ஸ் கவிதை கட்டுரை கேள்வி பதில் என எழுதி கொண்டு இருக்கிறேன். எனது படைப்புகள் வெளிவராத பத்திரிக்கைகளே இல்லை எனலாம் தற்போது எனக்கு 72 வயது ஆகிறது கடந்த 55. ஆண்டுகளுக்கு மேலாக அனைத்து பத்திரிகைகளுக்கும் இன்றளவும் எழுதி கொண்டு இருக்கிறேன். அன்று என் வகுப்பு ஆசிரியர் கொடுத்த ஊக்கமும் ஆக்கமும் தான் காரணம் அவர் தனது பணி காலத்திலேயே அந்த காலத்தில் ஜனாதிபதி விருது வாங்கியவர். நல்லாசிரியர் விருது அவருக்கு கிடைத்தது. இன்று அவர் இல்லை என்றாலும் என் மனதிலும் எல்லோர் மனதிலும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார். நான் அரசு ஊழியராக இருந்து பணி ஓய்வு பெற்று இருக்கிறேன்.



எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி



1. ஒரே வேடத்தில் நடிச்சா அது க்குத்தான் லாயக்குனு முத்தி ரை குத்திடுவாங்களா டைரக்டர் சார் ?

முதல்ல நடிக்க லாயக்கானு நீ நிரூபிச்சுக்காட்டு...

2.என்னதான் நேரமே இல்லை ன்னாலும் ஆபீஸ்ல வந்துதான் ஷேவ் பண்ணணுமா ? இதெல் லாம் டூ மச் !

3..கடைசி நேரத்தில் டாக்டர் எ னக்கு ஆபரேஷன் பண்ணலை அப்ப நீ மயிரிழையில் உயிர் தப்பினேனு சொல்லு !

4.. மேனேஜருக்கு வீட்டுலயும் வேலை அதிகம் போல... எப்படிச் சொல்ற ? பொறந்தாலும் ஆம்பளையா பொறக்கக் கூடாது... ஐய..பொறந்து விட்டா பொம்பளைய நினைக்க கூடாதுனு பாடுகிறாரே....

5..என்னய்யா கான்ஸ்டபிள் நீ... கையில் லத்தி இருந்தும் ஒரு ரவுடிக்குப் பயந்து ஓடி வந்திருக்கியே...?
என் கைல லத்திதான் இருந்தது. அவன் கைல கத்தி இருந்ததே சார் !

காற்று !

மிருதுவாய் தவழும் தென்றல்
செவியில் சங்கீதம் பாடுதடி

மனிதனின் பேராசை ஊழிக் காற்றாய் ஆடுதடி

அறிவியலின் அசுர வளர்ச்சி சூறாவளியாய் வீசுதடி

இயற்கை அன்னை அழிவில் சுனாமி வந்து சீறுதடி

நிலமும் நீரும் பாழ்படுகையில்
சுழல் காற்று அடிக்குதடி

மரங்கள் வெட்டிச் சாய்கையிலே
தென்றலும் புயலாய் மாறுதடி

செயற்கையை விடுத்து
இயற்கையைப் பேணு

காற்று உன் காதில்
கீதம் இசைக்குமடி !



பி. ஆர். கிரிஜா



சுதந்திரம்





மலர்மதி

சுதந்திரம் பற்றி சிறப்புரையாற்றிவிட்டு, வீடு திரும்பினார் பேச்சாளர் பன்னீர்.

"நாளை வீட்டை விட்டு வெளியே எங்கும் போகப்படாது. நிறைய வேலை இருக்கு. புரிஞ்சுதா?" என மனைவி அதட்ட, 'கப்,சிப்'பென அடங்கிப் போனார் பன்னீர்.

யானை-கரடி-முயல்

கவிஞர் இராஜபாளையம் பா முருகேசன்

காட்டில் கொய்யா தோட்டம் இருந்தது நடுவில் கிணறும் அங்கிருந்தது... வாட்டமில்லா மலர்களும் அங்கே வண்ணங்களில் பூத்திருந்தது.

கிணற்றில் தண்ணீர் இறைப்பதற்காக சிவப்பு நிறத்தில் வாளியோடு கயிறும் கூட அங்கிருந்தது.

கன்னங்கருத்த யானை அந்த கிணற்றுக்கு காவலாய் நின்றிருந்தது.



சின்ன முயலும் சிவந்த கரடியும் தண்ணீர் அருந்த அங்கே வந்தன இந்த கிணறு எனக்கே சொந்தம் என்னைத்தவிர எவரும் இங்கே நீரினைத் தொடக் கூடாதென்றது.

கரடியும் முயலும் கூடிப்பேசின. கிணற்றை விலைக்கு கேட்டு நின்றன யானையார் கேட்ட பொருளைக் கொடுத்து கிணற்றினை தங்களின் உரிமையாக்கின.

அடுத்த நொடியில் வாளியில் தண்ணீர் எடுக்க முயலார் கயிற்றினை எடுத்தார். யானையார் மீண்டும் தடுத்து சிரித்தார்... கரடியார் உடனே ஏன் என கேட்க ....

கிணற்றை நான் விற்றது உண்மை நீரினை நான் விற்க்கவில்லை நீரினை எடுக்க வேண்டும் என்றால் எனக்கு மீண்டும் பொருட்கள் தேவை என்றே யானை சொன்னதைக் கேட்டு முயலும் கரடியும் திகைத்து நின்றன. நடந்ததையெல்லாம் வேடிக்கை பார்த்த நரியார் அங்கே விரைந்து வந்தார். நடுவராக தீர்ப்பினை சொன்னார்.

யானையார் கிணற்றை விற்றது உண்மை. கிணற்று நீரோ அவரின் உரிமை. கிணற்றை கிணற்று நீரினை யானை எடுத்துக்கொள்ள தடையுமில்லை. உடனடியாக நீரை உறிஞ்சி எடுத்து வெறும் கிணற்றினை உடனே தந்திட வேண்டும். மறுத்தால் நீரினை சுமக்கும் கிணற்றுக்கு வாடகை தன்னை கொடுத்திட வேண்டும் என்று நரியார் சென்னதைக்கேட்டு யானையார் விலகிசென்றார் மெல்ல...

முயலுடன் கரடி மற்றுள்ள விலங்குகள் நீரினைப்பகிர்ந்து தாகம் தீர்த்தன

யுக்தியால் பிறரை ஏமாற்ற நினைத்தால் புத்தியுள்ளவன் நம்மை வெல்வான் என யானையார் உணர்ந்ததை நாமும் உணரனும்.

நாளும் பொழுதும் நன்மையை பகிரனும்.

சோகத்தின் முகம்



ஸ்ரீநிவாஸ் பிரபு,
சென்னை 9340051321

இன்று
ஒவ்வொரு மனிதனின்
மனதினுள்ளும்
விளக்க முடியாத நிலையில் இருந்து
கொண்டே இருக்கிறது
ஒரு இனம் புரியாத சோகம்,
கலவிக்குப் பிந்தைய
அமைதியைப் போன்றோ,
தோல்வியுற்ற காதலின்
கருமை படர்ந்த
நிழலைப் போலவோ
அல்லது
பகுத்தறிவால் எட்ட இயலாத
மர்மத்தைப் போன்றோ
அமைதியாய் தலைகுனிந்து
நின்று கொண்டே இருக்கும்
சோகங்கள் எப்போதும்
மனிதர்கள் எதிர்கொள்ளும்
விசித்திரத் தருணங்களை
வேடிக்கை பார்த்த வண்ணமே
இருந்துகொண்டிருக்கிறது

உண்மை என்ன ?



சுதந்திரம் புரிந்தோமா –அது
பயணித்து வந்த
பாதை அறிவோமா...

எழுச்சிமிகு
தலைவர்கள்
உணர்வுமிகு கவிஞர்கள்
அறவழி நின்று
அடக்குமுறைகளை எதிர்கொண்டு
ஆயுதங்கள் மறுத்து
அகிம்சை வழிமுறை
மறவாது கைக்கொண்டு
உறக்கம் மறந்து
உண்ணாமல் துயர்கொண்டு
அடைந்த சுதந்திரம்
அதன் மகிமை
உன்னதம் புரியாது
சுதந்திர தினத்தை
நமக்கு கிடைத்த
விடுமுறை தினமாகக்
கொண்டாடி மகிழ்கிறோம்
உண்மை புரியாது
அர்த்தம் கொள்கிறோம்.

கா. ஹபீப் முகமது.

சுதந்திரம்



சசிகலா விஸ்வநாதன்
Mob No 9900088027

களத்துமேட்டில்...

எறும்புகள் சாரியாய் படையெடுத்து
தானியம் புசிக்கன்றன!

குருவிகள் சிதறிக்கிடந்த
தானியங்களைக் தேடி நின்றன!

மணிப் புறாவும்
மாடப் புறாவும் கூடவே தேடுகின்றன!

அணில்கள் இங்கும் அங்கும்
ஒடி பசியாறுகின்றன!

காகங்கள் மரத்து மேலே பறந்து
காத்திருக்கின்றன;
தங்கள் முறை நேர தருணத்திற்கு!

அவரவர் சுதந்திரத்தை
அவரவர் அனுபவிக்க
மற்றவர் தடுக்கும் எண்ணமில்லை!

வானத்தில் வட்டமிட்ட பருந்தொன்று
"சட்" என இறங்கி
அணிலை கவ்வி எடுக்கும் வரை...

நாயும் பூனையும் திகைத்தே நின்றன
எதையும் உண்ணாமல்;
குறைக்கவும்; கத்தவும்; மறந்து.

ஜோக்

அமைச்சர் : தளபதியாரே! அரசர் தண்டோரா போடச் சொல்கிறாரே! எதற்கு?
தளபதி: இன்று அவர் ஓடியது வழக்கமான பயிற்சி ஓட்டம் என்றும் அதை தவறாக புரிந்து கொண்டு ஜோக் எழுத்தாளர்கள்ள் ஜோக் எழுத வேண்டாம் என்று அறிவிக்க சொல்றார்.

கணவன் : நம்ம ஏரியா ராப்பிச்சையிடம் ஏண்டி என் போன் நம்பரை கொடுத்தே?
மனைவி :- ஏன்? என்னாச்சு?
கணவன்: எனக்கு தினமும் வாட்ஸாப்பில் ஒரு சமையல் குறிப்பு அனுப்பி கடுப்பேத்துறான்!



நாஞ்சில் சு. நாகராஜன்
பறக்கை.



ஒரு உதாரணம்

அடிமைத்தனத்திற்கு
பழகிவிட்டால் நம் பலத்தையும்
மறந்து விடுகிறோம்...

கவிதை



முகநூலில் முகம்
காட்டாதவள்
இன்ஸ்டாவில் ரீல்ஸ்
பதியாதவள்

முகம் மறைத்து
ஸ்கூட்டி பறப்பவள்
மேனி முழுவதும்
ஆடை நிரப்பியவள்

நகப்பூச்சு விரல்களில்
இடாதவள்
நகை இதழில் செம்மை
தீட்டாதவள்

அகம் முழுவதும்
நிரம்பி விட்டாள்
அங்கும் இங்கும்
சுழலும் விழிகளாலே

கே.அசோகன்
சென்னை

உளவியல் பார்வையில்
இத்னூண்டு கதை...

கவிஞர்
இரா. சிவானந்தம்,
கோவில்பட்டி.

சிறரர் கதை எழுத்தாளர்,
கோ. சுரேஷ்குமார்,
கோவில்பட்டி.

அலுவலகம் கிளம்ம
தலை சீவிக் கொண்டிருந்த
போது - மனைவி
தொண - தொண் என்றிருந்தான்.
கோவத்துடன் சுவற்றோடு
சேர்த்து ஒரு அறை கொடுத்தான்.
இரண்டு பற்கள் போயிற்று -
கையில் இருந்த தலைவாரும்
சீப்பில்...

காலையிலேயே மனைவியின்
அர்ச்சனை சுப்ரபாதம்
தீவரீமாக தொடங்கியது!
செவிகளை கூர்மையாக்கி
பேசு.. பேசு..
உனது உணர்வுகளை
அங்கீகரிக்கிறேன் என்று
தீனி போட்டான் கணவன்!
அமைதி! அமைதி....



சிறிய விஷயத்தில்
பெரிய பாதிப்பு!

அமைதி! அமைதி....

புரிதலே பாசத்தின் பாலம்... அமைதியே வாழ்வின் இனிமை!

- கோபம் நொடிப்பொழுது,
  பாதிப்பு நீண்டநாட்கள்.
- புரிதல் ஒரு நிமிடம்,
  அமைதி வாழ்நாள் முழுவதும்.
- பேச்சால் பிரச்சினை வரும்,
  புரிதலால் உறவு வளரும்.



சிறிய விஷயத்தில் சினம் வேண்டாம்...
சிறந்த உறவிற்கு புரிதல் வேண்டும்!

Congratulations

www.kovilpattifm.com

இன்று மின்னிதழ் @ Indhru.In 7094053241

மண்ணில் விதைக்கப்படும்
விதை இருள், அழுத்தம்,
வெப்பம், ஈரம் ஆகியவற்றை
ஏற்றுக்கொண்டு நிலத்தில்
வளர்வது போல,
மனிதனுக்கு ஏற்படும்
கவலைகள், அழுத்தங்கள்,
பணிகள், சுமைகள் அவனைச்
செம்மைப்படுத்தி
மனிதத்தை
வெளிக் கொணருகிறது.!





நாள் 1

ஒழுங்கு படுத்துங்கள்

நீங்கள் பயன்படுத்தும் பகுதியை சுத்தமாக இன்று ஒரு அறையை ஒழுங்குபடுத்தவும். ஆங்காங்கே உள்ள பொருட்களை அது அதற்கான இடத்தில் எடுத்து வைக்கவும். குப்பைகளை வெளியே வீசவும். முழு வீட்டையும் சுத்தப்படுத்த வேண்டும் என்றால் நேரம் இருக்காது. ஆனால் ஒரு அறையை ஒரு குறிப்பிட்ட பகுதியை சுத்தப்படுத்த வேண்டும் என்றால் எளிமையாக செய்யலாம். இன்று அதை செய்யுங்கள்.

நாள் 2

சேமிப்பு

உங்கள் வருமானத்தில் எவ்வளவு சேமிக்கிறீர்கள்? இன்னும் எவ்வளவு சேமித்தால் நல்லது என்று சிந்திக்கவும். அந்த சேமிப்புக்கு வட்டி எவ்வளவு கிடைக்கும்? என்று எண்ணிப்பாருங்கள். உங்கள் டைரியில் குறிப்பிடவும். தொடர்ந்து முயற்சி செய்ய நல்ல விடை கிடைக்கும்.

நாள் 3

கதவுகள்

பழைய துணியை நனைத்து ஈரமாக்கி கதவுகளை சுத்தம் செய்யவும். ஒட்டடை, தூசி, குளவிக்கூடுகள் உள்ளதை சுத்தம் செய்யவும். இப்பணி ஒரே நாளில் எல்லா கதவுகளையும் செய்ய இயலாது. ஒரு மாதம் ஜன்னல் கதவுகள், ஒரு மாதம் பெரிய கதவுகள் என்று பிரித்து பிரித்து செய்யவும்.

நாள் 4

உணவு

தினசரி உங்கள் உணவுப்பட்டியலில் காய்கறி, கீரைக்கு முக்கியத்துவம் கொடுங்கள். கீரை இல்லாத நாள் இருக்க வேண்டாம். நிறைய காய்கறி உண்ணுங்கள். இதன் மூலம் உடல் எடை கட்டுக்கள் வரும். அனைத்து வைட்டமின்களும் உடலில் சேரும். இன்றே வாங்கி உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

நாள் 5

சுத்தம்

வீட்டில் உள்ள ஒட்டடைகளை இன்று சுத்தப்படுத்துங்கள். இந்த வேலையை தொடர்ந்து செய்து வரவேண்டும். இந்த ஒட்டடை உருவாக்கும் பூச்சிகள் நம்முடன் தான் வாழ்கிறது. ஆனால் கண்ணுக்குத்தெரியாது. அவைகள் நம்முடன் போட்டி போட்டுக்கொண்டு நம் வீட்டிலேயே இருக்கும். இதற்காக உள்ள சுத்தப்படுத்தும் மாப் அல்லது விளக்கமாறு இவற்றை பயன்படுத்தவும். மூக்கில் துணி கட்டிக்கொள்ளவும்.

நாள் 6

நட்பு


உங்கள் உறவினரை, நண்பரை தொடர்புகொண்டு நேரில் சந்திக்கலாமா? ஒரு காபி அருந்தலாமா என்று ரிலாக்ஸ் செய்யவும். நட்பை மாதம் ஒரு நாளாவது நாமே அழைத்து விசாரித்து வந்தால் பிறகு அவர்களே ஒரு நாள் உங்களை விசாரிப்பார்கள். நட்பை பேணி காக்கவும்.

நாள் 7

தோட்டம்

உங்கள் வீட்டின் தோட்டத்தை பராமரிக்கவும். குப்பைகளை மண் உரமாக மாற்றவும். மற்ற குப்பைகளை வெளியில் தூக்கிபோடவும். களைகளை பிடுங்கவும். தேவையில்லாத பிளாஸ்டிக் குப்பைகளை வெளியே போடவும். நீர் பாய்ச்சுவதற்கான பாத்திகள் கட்டவும். புதிய செடி ஏதாவது வளர்க்க முயற்சி செய்யவும்.

தொடரும்..



கதைகளில், கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல. படைப்புகள் கொடுத்த வலைதளங்களுக்கு நன்றி.

அழகிய ஆரம்பம் இன்று மின்னிதழ் வெளியிடுபவர்

ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று மின்னிதழ் - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் : 7094053241

